முதல்வர் அம்மா அவர்கள், இதுவரையில் வரலாற்றில் இல்லாத அளவிற்கு கல்லூரிகளைத் திறந்திருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 228, மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**228—**

**கசிவுநீர்க் குட்டை**

***11301—திருமதி த. இந்திராகாந்தி:**

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) துறையூர் தொகுதி, துறையூர் ஒன்றியத்திலுள்ள சங்கம்பட்டி அரசுப் புறம்போக்கு நிலத்தில் கசிவுநீர்க் குட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) துறையூர் தொகுதி, துறையூர் ஒன்றியத்திலுள்ள சங்கம்பட்டி அரசுப் புறம்போக்கு நிலத்தில், விவசாய நீர்த்தேக்கக் குட்டை அமைக்க சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.*

*முற்பகல் 10-15*

**திருமதி த. இந்திராகாந்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணை இமை காப்பதுபோல் கழகத்தையும், தமிழக மக்களையும் கண் துஞ்சாது காத்துவரும் கழகத்தின் காவல் தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, எனது துறையூர் தொகுதி*

மிகவும் பின்தங்கிய தொகுதி, வானம் பார்த்த பூமி, மழைக்காலங்களில் வாரிகளிலிருந்து வரும் நீர் வரத்தைச் சேமிப்பதற்காக பூவாங்குட்டை உட்பட பல பகுதிகளிலும் மற்றும் அதன் அருகில் வேறு சில இடங்களும் உள்ளன. அந்தப் பகுதியில் நீர் சேமிப்பு ஆதாரங்களை மேம்படுத்தும் வகையில், இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்து, கசிவுநீர்க் குட்டை அமைத்திட, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையூர் ஒன்றியம், கொட்டையூர் கிராமம், சங்கம்பட்டி குக்கிராமம் சர்வே எண் 21/1 மற்றும் 2-இல் அமைந்துள்ள இடம் வருவாய்த் துறைப் பதிவேடுகளில் பூவாங்குட்டை அரசுப் புறம்போக்கு நிலம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதால், இவ்விடத்தில் மற்றுமொரு புதிய விவசாய நீர்த் தேக்கக் குட்டை அமைக்க தற்போது உள்ள திட்டங்களில் அனுமதியில்லை. மேலும், சங்கம்பட்டி கிராமத்தில் புதிதாக விவசாய நீர்த் தேக்கக் குட்டை அமைக்க ஏதுவாக தகுந்த வேறு புறம்போக்கு நிலம் இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க நடப்பாண்டில் செயற்கைமுறை நீர் செறிவூட்டுத் திட்டத்தின்மூலம் இதே துறையூர் ஒன்றியத்திலுள்ள விவசாயிகள், நீர் சேமிப்புமூலம் பயன்பெறும் வகையில் ரூ.8.30 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு பெரிய தடுப்பணைகள் வெங்கடேசபுரம் மற்றும் பொன்னுசங்கம்பட்டி கிராமங்களில் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.*

**திருமதி த. இந்திராகாந்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்துகின்ற வகையில், வேளாண்மைத் துறைக்கு அதிக முக்கியத்துவம் அளித்து,*

2012 மே 8]

*சித்திரைத் திருநாளை உழவர் பெருவிழாவாக அறிவித்து, ஒரு மாத காலம் கிராமங்கள்தோறும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தி, இரண்டாவது பசுமைப் புரட்சியை ஏற்படுத்தி, விவசாயிகளின் ஒளிவிளக்காய்த் திகழும் மாண்புமிகு அம்மா அவர்களே! கடவுள்கூட கேட்டால்தான் வரம் கொடுப்பார், ஆனால், தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் கேட்காமலேயே, வெங்கடேசபுரம், பொன்னுசங்கம்பட்டி பகுதிகளில் தடுப்பணை கட்ட ஆணையிட்ட, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 229, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**229—**

**சாலை வசதி**

***5320—திரு. பி.எல். சுந்தரம்:**

*மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வனக்கோட்டத்திலுள்ள குன்றி, மாக்கம்பாளையம், மல்லியம்மன் துர்க்கம் ஆகிய கிராமங்களுக்குச் சாலை வசதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*ஈரோடு மாவட்டம், பவானிசாகர் சட்டமன்றத் தொகுதி, சத்தியமங்கலம் வட்டம் அஞ்சணைப்பிரிவு முதல் குன்றி வரையுள்ள 9.60 கி.மீ. தூர வனச் சாலையைப் பிரதம மந்திரி கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேம்படுத்த அரசாணை எண் 182(டி) கிராம மேம்பாடு மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையால் ரூ.382.30 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதற்காக 9.6 கி.மீ. தூர சாலைகளுக்கு மதிப்பீடு தலைமை வனப்*